## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.22/2025

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா,, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : சேகர் | ஜாதி | : -- |
| வயது | : 38 | கிராமம் | : தாஸ்ரெட்டி கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**03.08.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 15.10.1981ம் தேதியிட்டு என் தகப்பனாருக்கு சுப்பிரமணியன் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 09.06.1993ம் தேதியிட்டு பிரதிவாதிக்கு என் அப்பா எழுதி கொடுத்த பதிவு செய்த அடமான ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(அடமான ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பட்டா எண்.326ல் என் அப்பா பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 05.04.2025ம் தேதியிட்டு நாங்கள் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)